1979 மார்ச் 7]

திரு. இரா. அமிர்தராஜ்: தலைவர் அவர்களே, திருச்செந்தூர் என்பது பல ஆயிரக்கணக்கான பயணிகளும் பக்தர்களும் வந்து போகின்ற இடமாக இருக்கின்றது. இவர்களுக்குத் தேவைப்படும் வசதியான குடிதண்ணீர், பொது சுகாதாரம், வடிகால் வசதி போன்ற இவைகளை ஏற்படுத்த வேண்டியது தவிர்க்க முடியாத நிலையில் இருக்கிறது. ஆகவே திருச்செந்தூரையும், அருகிலுள்ள பேரூராட்சிகளையும் சேர்த்து திருச்செந்தூரை ஒரு நகராட்சியாக மாற்றுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, பேரூராட்சியாக இருந்தாலும் சரி, நகராட்சியாக இருந்தாலும் சரி, குடிதண்ணீர், வடிகால் வசதிகளை செய்து கொடுக்க வேண்டியது அரசின் கடமையாகும். ஆகவே அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும். நகராட்சியாக மாற்ற வேண்டும் என்றால் மாவட்ட ஆட்சித்தலைவர் அதற்கான திட்டத்தை அனுப்பிவைத்தால் அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

பத்திரப்பதிவுக் கட்டணங்களில் பேரூராட்சிகள் பங்கு.

*வினா எண் 267—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூராட்சி மன்றங்களுக்கு நில விற்பனையின் மேல் கிடைக்கும் (Stamp duty) யை அந்தப் பேரூராட்சிகள், ஒன்றியங்கள் கணக்கில் ஈடு செய்ய தற்போது மாநில பத்திரப் பதிவாளருக்கு உள்ள அதிகாரத்தை மாவட்ட பத்திரப் பதிவாளர்களுக்கு மாற்ற அரசு தீர்மானித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது முதல் மேற்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து:

(அ) விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

(ஆ) 31-12-1978 உடன் முடிவடைந்த காலாண்டிலிருந்து நடைமுறைக்கு வந்துள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவரவர்களே, இந்த நடவடிக்கையை மேற்கொண்டதற்காக அரசுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.